# KOODUM

கூடும் எல்லாம் கூடும்
அவர் வார்த்தையால் கூடாதது ஒன்றுமில்லை
கூடும் எல்லாம் கூடும்
அவர் வார்த்தையால் கூடாதது ஒன்றுமில்லை

அவர் வார்த்தை என்றும் வெறுமையாக திரும்புவதேயில்லை
இயலாததென்பது அவர் அகராதியில் இல்லை

## Verse 1

அவர் வார்த்தையினாலே உலகம் உண்டானது
அவர் வார்த்தையினாலே வெளிச்சம் உண்டானது
அவர் வார்த்தையினாலே குருடன் கண் திறந்தது
அவர் வார்த்தையினாலே செவிடன் காது கேட்டது

அவர் வார்த்தை ஒன்றுபோதும் உன் நிலைமையை மாற்ற
அவர் வார்த்தை ஒன்றுபோதும் உன் துக்கத்தைப் போக்க

## Verse 2

அவர் வார்த்தையினாலே பாவத்தை மேற்கொள்வேன்
அவர் வார்த்தையினாலே சத்துருவை வெல்வேன
அவர் வார்த்தையினாலே தோல்விகளை முறிப்பேன்
அவர் வார்த்தையினாலே வாழ்க்கையிலே ஜெயிப்பேன்

அவர் வார்த்தை ஒன்றுபோதும் என்னை விடுதலையாக்க
அவர் வார்த்தை ஒன்றுபோதும் என்னை பரலோகம் சேர்க்க

ஒன்றுமில்லை ஒன்றுமில்லை
ஒன்றும் இல்லவே இல்லை
ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை

கடனா அதை அடைக்கக்கூடும்
கடினம் அதை முறிக்கக்கூடும்
வியாதிக்கு சுகம் அளிக்கக்கூடும்
கூடாதது ஒன்றுமில்லை

சோர்வை தேற்றக்கூடும்
கண்ணீரை மாற்றக்கூடும்
பிரிவை சேர்க்கக்கூடும்
கூடாதது ஒன்றுமில்லை